**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை**

**அசல் வழக்கு எண். 13/2022**

PW1 – திரு. கார்த்திக் நாள். 19.11.2024

(1969ம் ஆண்டில் 44வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திருமதி.B.ராமு என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**3 மற்றும் 4 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. வருவாய் துறையில் வாரிசு சான்றிதழ் கேட்டு மனு கொடுத்தது யார் என்றால் நான்தான். எப்போது கொடுத்தேன் என்றால் தேதி ஞாபகமில்லை என் தந்தை இறந்த உடன் கொடுத்தேன். நான் வருவாய் துறையில் வாரிசு சான்றிதழ் கேட்டு மனு கொடுத்த விவரம் 3 , 4 பிரதிவாதிகளுக்கு தெரியுமா என்றால் அவர்களுக்கு தெரியுமா என்று எனக்கு தெரியாது. மேற்படி மனு கொடுத்த விவரத்தை 3 , 4 பிரதிவாதிகளுக்கு தெரியப்படுத்தினேனா என்றால் தொலைபேசி மூலம் தெரியப்படுத்தினேன். தொலைபேசியில் தெரியப்படுத்தியதற்கு 3 , 4 பிரதிவாதிகள் என்ன கூறினார்கள் என்றால் நீங்கள் என்ன செய்வது என்றாலும் செய்து கொள்ளுங்கள் என தெரியவித்தார்கள்.

2. 3 , 4 பிரதிவாதிகளுக்கு தொலைபேசி மூலம் தெரியப்படுத்தினேன் என்றும், தொலைபேசியில் தெரியப்படுத்தியதற்கு 3, 4 பிரதிவாதிகள் நீங்கள் என்ன செய்வது என்றாலும் செய்து கொள்ளுங்கள் என தெரிவித்தார்கள் என பிராமு மற்றும் நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். 3, 4 பிரதிவாதிகளுக்கு தொலைபேசி மூலம் தெரியப்படுத்தினேன் என்றும், தொலைபேசியில் தெரியப்படுத்தியதற்கு 3, 4 பிரதிவாதிகள் நீங்கள் என்ன

செய்வது என்றாலு ம்செய்து கொள்ளுங்கள் என தெரிவித்தார்கள் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. எனது பிராதில் 1996ம் வருடம் ஆகஸ்ட் முத்துலிங்கம், ராமாமிர்தம் விவாகரத்து செய்துள்ளனர் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். 12.12.2002ல் விவாகரத்து செய்யப்பட்டுள்ளதாக வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அது பதியப்பட்ட தேதியாகும். மேற்படி ஆவணத்தில் 1996ம் வருடம் ஆகஸ்ட் மாதம் விவாகரத்து நடைபெற்றதாக சொல்லப்பட்டுள்ளதா இல்லையா என்றால் விவாகாரத்து நடைபெற்ற போது ஜீவனாம்சமாக 1996ல் சொத்துக்கள் கொடுக்கப்பட்ட விவரம் எழுதப்பட்டது. மேற்படி ஆவணத்தில் 1996ம் வருடம் ஆகஸ்ட் மாதம் விவாகரத்து நடைபெற்றதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல.

4. விவாகரத்து நடைபெறற் போது ஜீவனாம்சமாக 1996ல் சொத்துக்கள் கொடுக்கப்பட்ட விவரம் வா.சா.ஆ.1 ஆவணத்தில் எழுதப்படவில்லை என்றும், எழுதப்பட்டது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முத்துலிங்கம் மற்றும் 4ம் பிரதிவாதிக்கு விவகாரத்து எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல, அன்றைய தேதியில் 4ம் பிரதிவாதிக்கு ஜீவனாம்சமாக சொத்துக்கள் எழுதி தரப்பட்டது. வருவாய் துறையில் வாரிசு சான்றிதழ் கோரி மனுதாக்கல் செய்யும்போது யார்யாரை வாரிசுகளாக காண்பித்து மனுகொடுத்தேன் என்றால் என்னை, எனது தாயார், எனது சகோதரி சுமதி, எனது தம்பி ரத்தினம், மற்றும் முதல் மனைவி மகள் ஜெயசித்ரா ஆவார்கள். மேற்படி வருவாய் துறையில் கொடுக்ப்பட்ட நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் ஞாபகமில்லை.

5. வா.சா.ஆ.4 ஆவணம் நான் கொடுத்த மனு நிராகரிக்கப்பட்டது என இணையதள அத்தாட்சி என்றால் சரிதான். என்ன காரணத்திற்காக நிராகாரிக்கப்ட்டது என்றால் இரண்டுமனைவிகள் என்பதால் நிராகரிக்கப்பட்டது.

இரண்டுமனைவிகள் என்பதால் நிராகரிக்கப்பட்டது என எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லி உள்ளேன். மேற்படி விசயங்களை பிராதில் சொல்லவில்லை என்றும் சொல்லி உள்ளதாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ல் சொல்லப்பட்டுள்ள விவரங்களை சொல்லாமல் இவ்வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் முதல் மனைவியை சேர்க்காமல் இவ்வழக்கை முதலில் தாக்கல் செய்தேன்.

6. பிராதில் 2 , 3 பிரதிவாதிகள் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ள வாய்மொழியாக சொன்னார்கள் என சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ 4 ஆவணத்தில் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ள எழுத்து மூலம் சொல்லப்பட்டது என்றால் வா.சா.ஆ.4 ஆவணத்தை கொடுத்து வாய்மொழியாகவும் சொன்னார்கள். நான் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்றும், பொய்யான சங்கதிகளை கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரைக்கு பின்பு தான் 4ம் பிரதிவாதியை இவ்வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரிதான்.

7. முத்துலிங்கத்திற்கும் எனது தாயாரை கொல்லங்குடி அருகே உள்ள கருப்பண் கோவிலில் வைத்து திருமணம் செய்துள்ளார் என்று சொல்லி உள்ளேன் என்றும், எந்த தேதியில் நடைபெற்றது என்று சொல்வில்லை என்றால் சரிதான். முத்துலிங்கத்திற்கும் எனது தாயாரை கொல்லங்குடி அருகே உள்ள கருப்பண் கோவிலில் வைத்து திருமணம் நடைபெறவில்லை என்றும், நடந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முத்துலிங்கம் என்பவரின் சொத்துக்களை அபகரிக்கவேண்டும் என்று பொய்யான ஆவணங்களை தயார் செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் வாதி முத்துலிங்கத்தின் மனைவி இல்லை என்றால் சரியல்ல. வாதிகள் யாரும் முத்துலிங்கத்தின் வாரிசுகள் இல்லை என்றும், 3, 4 பிரதிவாதிகள் தான் வாரிசுஎன்றால் சரியல்ல. பிராதில் சொல்லப்பட்டுள்ள

வியாஜ்ய மூலம் சரியல்ல என்றால் சரியல்ல.

8. முத்துலிங்கத்திற்கு பாத்தியமான சொத்துக்கள் பற்றி பிராதில் சொல்லவில்லை என்றால் சொல்லி உள்ளேன். எந்த சொத்துக்களை சொல்லி உள்ளேன் என்றால் திருவாடானை தாலுகா, கிளியூர் கிராமத்தில் உள்ள எனதுதந்தை மற்றும் தாயாருக்கு இணைந்து பாத்தியப்பட்டது. மேற்படி சொத்தின் சர்வே எண் மற்றும் அளவுகள் என்ன என்றால் சர்வேஎண் ஞாபகமில்லை 20 செண்ட் ஆகும். எதற்காக வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன் என்ற விவரத்தை சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். என்ன காரணம் சொல்லப்பட்டுள்ளது என்றால் மேற்சொன்ன சொத்தை பிரித்துக் கொள்வதற்கு தேவைப்படுவதாக சொல்லி உள்ளேன். மேற்படி காரணம் எதுவும் சொல்லப்படவில்லை என்றும், காணரம் சொல்லப்படாம்ல் தாக்கல் செய்யப்பட்ட பிராதானது நிராகரிக்கப்படகூடியது என சொன்னால் சரியல்ல. மேற்படி சொத்தின் மதிப்பு ஐந்துலட்சம் என்றால் எனக்கு தெரியாது. நான் கேட்க கூடிய பரிகாரம் எனக்கு கிடைக்ககூடியது அல்ல, வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை